நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வானூர்

முன்னிலை:- திருமதி.N.பீரித்தி, B.A.,B.L.

குற்றவியல் நீதித்துறை நடுவர், வானூர்.

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ம் நாள் திங்கட்கிழமை

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 315/2025</u>

<u>C.N.R.No.TNVP 36-001921-2025</u>

அரசுக்காக.
காவல் ஆய்வாளர்,
கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு,
குற்ற எண்.1186/2024 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

| | |
|---|---|
| எதிரி.1 | தர்மன் (34/2024) த/பெ.சுப்ரமணி, எடப்பாளையம் கிராமம், வெம்பாக்கம் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம் |
| எதிரி.2 | டில்லிபாபு (32/2024) த/பெ.ஆனந்தன், பிள்ளையார் கோயில் தெரு, பெருங்களத்தூர், செய்யார் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் |

...... எதிரிகள்

## <u>CASE SUMMARY</u>

| S.No. | Particulars | Report |
|---|---|---|
| 1. | The period of remand of the accused | A1 and A2 Arrested on 10-08-2024 and Released on Station Bail 10-08-2024 |
| 2. | The date of filing of the complaint/final report in the Court | Date of filing final report on 23-06-2025 Taken Cognizance on 23-06-2025 |
| 3. | The date of committal of the case to the Court of Session | Not Applicable |
| 4. | The date of 1$^{st}$ questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | Accused questioned on 20-09-2025 |
| 5. | Filing of all miscellaneous petitions | Nil |

| | | |
|---|---|---|
| | and their results including the results on challange before superior courts: except routine petitions like petitions under section 317 of the Code: | |
| 6. | Date of examination in – Chief and cross – Examination of a Witness | P.W.1 - Chief and Cross examined on 10-03-2026<br>P.W.2 - Chief and Cross examined on 10-03-2026<br>P.W.3 - Chief and Cross examined on 02-04-2026<br>P.W.4 - Chief and Cross examined on 07-04-2026 |
| 7. | Date of examination of the accused U/Sec.313 of the Code | 16-04-2026 |
| 8. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be ; and NBW pending/recalled | Nil |
| 9. | Grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கு 23/06/2025 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அது முதல் இந்நீதிமன்றத்தில் கவனமாக பரிசீலனையில் இருந்து வந்து குற்றம் முறையிடுவோர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் திரு.ராஜசேகர் நிலை 1 அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.ராமசந்திரன் அவர்கள் முன்னிலையாகி இறுதி விசாரணைக்கு வந்து இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்து ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## <u>தீர்ப்புரை</u>

<u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்</u>

கடந்த 10/08/2024-ந் தேதி 14:00 மணிக்கு வானூர் கூட்ரோட்டில் மதுவிலக்கு சம்மந்தமாக தணிக்கை செய்தபோது TN-22-CV-6807 என்ற பதிவெண் கொண்ட Indica Vista என்ற சிவப்பு நிற காரில் வந்த

இவ்வழக்கின் எதிரிகள் பாண்டிச்சேரி மாநில மதுபானங்ககளான 1) Budweiser Beer 650ml- 5Nos. 2) Kyra Wine 750ml – 1, 3) Mansion House Brandy 750ml – 2 Nos. 4) Bacardi 750ml – 1 5) Magic Moment 750ml – 2Nos வைத்துக்கொண்டு எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி அந்நிய மாநில மதுபானங்களை மேற்படி காரில் வைத்திருந்ததாக எதிரிகள் மீது கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் U/s.4(1)(a) r/w.4(1)(C), r/w 14(A) TNP Amendment Act 2024-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நகல்களும் BNSS 230 பிரிவின் கீழ் முறையாக இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றத்தினை மறுத்தனர். எனவே இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்த காரணத்தினால், எதிரிகள் மீது பிரிவுகள் U/s.4(1)(a) r/w.4(1)(C), 14(A) TNP Amendment Act 2024-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோதும், எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்காட விருப்பம் தெரிவித்தனர். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் 6 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அதில் அ.சா.1 மற்றும் அ.சா.4 சாட்சிகள் விசாரணை

செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. பட்டியல் சாட்சிகளில் முருகன், காவல் ஆய்வாளர் அமுதா ஆகியோர் விசாரிக்காமல் விலக்கி கொள்ளப்பட்டனர். அரசு தரப்பில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்று பொருள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மதுபானபாட்டில்களின் புகைப்படம் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-

10/08/2024ம் தேதி காலை 14:00 மணிக்கு கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் திருமதி.அமுதா என்பவருடன் தலைமை காவலர்கள் திரு.புஷ்பராஜ் மற்றும் திரு.விஜய்மாறன் ஆகியோர்கள் மதுவிலக்கு வழக்கு சம்மந்தமாக வானூர் கூட்ரோட்டில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது சந்தேகத்திற்கிடமாக வந்த TN-22-CV-6807 என்ற பதிவெண் கொண்ட சிகப்புநிற Indica Vista என்ற காரில் பாண்டிச்சேரி மதுபான பாட்டில்களான 1) Budweiser Beer 650ml- 5Nos. 2) Kyra Wine 750ml – 1, 3) Mansion House Brandy 750ml – 2 Nos. 4) Bacardi 750ml – 1 5) Magic Moment 750ml – 2Nos பாட்டில்கள் எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் வைத்திருந்த எதிரிகளை கைது செய்து தலைமை காவலர்கள் புஷ்பராஜ் மற்றும் விஜய்மாறன் என்பவர்கள் முன்னிலையில் TN-22-CV-6807 என்ற பதிவெண் கொண்ட சிகப்புநிற Indica Vista என்ற கார் (புகைப்படம் அ.சா.ஆ.3) மற்றும் 1) Budweiser Beer 650ml- 5Nos. 2) Kyra Wine 750ml – 1, 3) Mansion House Brandy 750ml – 2 Nos. 4) Bacardi 750ml – 1 5) Magic Moment 750ml – 2Nos பாட்டில்கள் (புகைப்படம்

அ.சா.ஆ.2) எதிரிகளிடமிருந்து கைப்பற்றி கைப்பற்றுதல் அ.சா.ஆ.1 தயார் செய்தார். பின்னர் நிலையம் வந்து எதிரிகள் மீது நிலையக்குற்ற எண்.118/2024 பிரிவுகள் 4(1)(a), 4(1)(C), 14(A) TNP Amendment Act 2024-ன் படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 பதிவு செய்தார். பின்னர் சாட்சிகள் தலைமை காவலர்கள் புஷ்பராஜ் மற்றும் விஜய்மாறன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அன்றைய தினமே காவல் ஆய்வாளர் திருமதி.அமுதா, சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன் மற்றும் கௌதம் என்பவர்கள் முன்னிலையில் பார்வை மகசர் அ.சா.ஆ-5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 தயார் செய்தார். எதிரிகளை கைது செய்து தக்கபிணையில் விடுவித்தார். பின்னர் வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் திருமதி.மீனா என்பவர் பார்வைக்கு வைத்தார். காவல் ஆய்வாளர் வழக்கு கோப்புகளை பெற்று எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களான மதுபான பாட்டில்கள் மற்றும் TN-22-CV-6807 Indica Vista என்ற (சா.பொ.1) காரை படிவம் 91 அ.சா.ஆ.7 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 4(1)(a) r/w 4(1)(C), r/w 14(A) TNP Amendment Act 2024-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

06) இவ்வழக்கில் தலைமை காவலர் திரு.புஷ்பராஜ் அ.சா.1 ஆகவும், காவல் ஆய்வாளர் திருமதி.மீனா அ.சா.2 ஆகவும், தலைமை காவலர் திரு.விஜய்மாறன் அ.சா.3 ஆகவும், திரு.கௌதம் அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

07) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து BNSS 351(1)(b)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோதும் எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகள் கூறுவதை

மறுத்து, தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்றும் கூறினர். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

08) இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

09) இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்யது யாதெனில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதேயாகும்?

10) தலைமை காவலர் திரு.புஷ்பராஜ் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில்

"கடந்த 10.08.2024 அன்று நான் கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவு தலைமை காவலராக பணியிலிருந்தபோது ஆய்வாளர் அமுதா தலைமையில் அவருடன் நானும் தலைமை காவலர் விஜயமாறன் ஆகியோருடன் 14.00 மணிக்கு வானூர் கூட்ரோடு அருகே வாகன சோதனை செய்து கொண்டிருந்தபோது வானூர் ரூ திருச்சிற்றம்பலம் கூட்ரோடு மார்க்கமாக வந்த டிஎன்.22 சிவி 6807 என்ற இண்டிகா விஸ்டா காரை நிறுத்தி விசாரித்தபோது காரில் இருந்து ஆஜர் எதிரிகள் இருவரும் தப்பி ஓட முயற்சி செய்தவர்களை மடக்கி பிடித்து விசாரித்துபோது காரை ஓட்டி வந்த ஆஜர் எதிரி தர்மன் உடனிருந்தவர் ஆஜர் டெல்லிபாபு ஆவார்கள். காரை சோதனை செய்தபோது பாண்டிச்சேரி மதுபானங்கள் Budweiser Beer 650ml- 5 Ns, Kyra Wine 750ml- 1No., Mansion House Brandy 750ml- 2Nos, Bacardi 750ml- 1No, Magic Moment 750ml - 2Nos பாட்டில்கள் இருந்தது. மேற்படி பாட்டில்கள் மற்றும் மேற்படி வாகனத்தை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். மேற்படி கைப்பற்றப்பட்ட Budweiser Beer 650ml- 5nos, Kyra Wine 750ml- 1, Mansion House Brandy 750ml- 2Nos, Bacardi 750ml- 1No, Magic moment 750ml- 2Nos

பின்பு ஆய்வாளர் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்குசொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.1186/2024 பிரிவுகள் 4(1)(a) r/w 4(1)(C), r/w 14(A) TNP Amendment Actன் படி எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்'' என்று சாட்சியமளித்துள்ளார்.

11) இவ்வழக்கில் அ.சா.1டன் கண்காணிப்பு பணியில் இருந்ததாக அரசு தரப்பில் சொல்லப்படும் புலனாய்வு அதிகாரி திருமதி.மீனா, காவல் ஆய்வாளர் அ.சா.2 ஆகவும், தலைமை காவலர் திரு.விஜய்மாறன் அ.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.2 மற்றும் அ.சா.3, அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளனர். மேலும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் 2024ம் வருடம் ஒரு நாள் 17:00 மணியளவில் வானூர் கூட்ரோடு அருகே இருந்தபோது கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் ஆய்வாளர் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து தயார் செய்த பார்வை மகசரில் தானும் முருகனும் கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

12) அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் சம்பவ இடம் அதிக வாகனங்கள் செல்லும் சாலை மற்றும் மக்கள் நடமாட்டம் மிகுதியாக உள்ள இடம் என்றால் சரிதான் என்றும், அந்த இடத்தில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக தனது ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13) அ.சா.3 அவரது குறுக்கு விசாரணையில் சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் மிகுதியாக உள்ள இடம் என்று சாட்சியமளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 பார்வை மகசரில் கையொப்பம் செய்ததை பற்றி சாட்சிமளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் தனிநபர்கள்

யாரையும் சாட்சியாக தான் விசாரிக்கவில்லை என்றும், படிவம் 91ல் சாட்சிகள் கையொப்பம் இல்லை என்றால் சரிதான் என்றும், சாட்சியமளித்துள்ளதிலிருந்து புலன் விசாரணை அதிகாரி எதிரிகளிடமிருந்து மதுபானங்களை கைப்பற்றினரா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றுதலின்போது தனிநபர் சாட்சிகள் யாரையும் புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்பதும் புலனாகிறது. எதிரிகளிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியதாக அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சியமளித்துள்ளபோதிலும் அ.சா.1 மற்றும் அ.சா.3 அ.சா.2ன் கீழ் பணிபுரியும் காவலர்கள் ஆவர். அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் காவல் துறையை சேர்ந்தவர்கள் ஆவர். இந்நிலையில் கைப்பற்றுதல் மகசர் மற்றும் படிவம் 91ல் தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யாமலும், தனிநபர் சாட்சிகளை விசாரிக்காமலும் புலனாய்வு அதிகாரி மேற்கொண்ட புலனாய்வில் நம்பகத்தன்மையில் சந்தேகமே ஏற்படுகிறது.

14) இவ்வாறான சூழ்நிலையில் விசாரணையில் எதிரிகள் மதுபான பாட்டில்கள் கடத்தி சென்றார்களா என்பதிலும் ஐயம் நிலவுகிறது. எனவே புலனாய்வு அதிகாரி அவருக்கு புள்ளியியல் தேவைப்படுவதால் தவறான வழக்கை ஜோடித்துள்ளாரோ என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுகின்றது. மேலும் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் எதிரிகளிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டது என்பதை உறுதியூட்டும் விதத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்காதது இவ்வழக்கில் நம்பகதன்மையில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே, அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகள் மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலைகளில் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகளை இந்த வழக்கின் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக**

16) மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, எதிரிகள் மீது பிரிவு 4(1)(a), r/w 4(1)(C) 14(A) TNP Amendment Act-ன் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, எதிரிகளை மேற்சொன்ன பிரிவின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.77/2025-ல் உள்ள 1) Budweiser Beer 650ml- 5Nos. 2) Kyra Wine 750ml – 1, 3) Mansion House Brandy 750ml – 2 Nos. 4) Bacardi 750ml – 1 5) Magic Moment 750ml – 2Nos மதுபானபாட்டில்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற W.P.No.6126/2020, 06.01.2020ன் அறிவுறுத்தலின் படி அழிக்கப்பட்டுள்ளது. அம்மதுபானங்கள் அழிப்பதற்கு முன்பு புகைப்படம் எடுக்கப்பட்டது. மேலும் சா.பொ.1 ஆன TN-22-CV-6807 என்ற எண் கொண்ட சிகப்பு நிற Indica Vista காரை அதன் உரிமையாளர் மனுதாக்கல் செய்து இந்நீதிமன்ற சி.எம்.பி.நெ.3860/2024, 11/09/2024ம் தேதி உத்தரவின்படி பெற்று சென்றுள்ளபடியால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு வாகனத்தின் உரிமையாளரே நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேல்

முறையீட்டு காலத்திற்கு பிறகு வாகனத்தின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

18) எதிரிகள் ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில், மேல்முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லை எனில் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.04.27 16:25:50 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.

பின் இணைப்பு -
அரசுத்தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.புஷ்பராஜ், தலைமை காவலர் |
| அ.சா.2 | திருமதி.மீனா, காவல் ஆய்வாளர் |
| அ.சா.3 | திரு.விஜய்மாறன், தலைமை காவலர் |
| அ.சா.4 | திரு.கௌதம் |

அரசுத்தரப்பு சான்றாவணம்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 10/08/2024 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.2 | 10/08/2024 | மதுபான பாட்டில்களின் புகைப்படம் |
| அ.சா.ஆ.3 | 10/08/2024 | காரின் புகைப்படம் |
| அ.சா.ஆ.4 | 10/08/2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 10/08/2024 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 10/08/2024 | மாதிரி வரைபடம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.7 | 25/03/2025 | படிவம் 91 |

<u>அரசுத்தரப்பு சான்று பொருள்</u> -

சா.பொ.1 TN-22-CV-6807 என்ற எண் கொண்ட சிகப்பு நிற Indica Vista கார்

<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள்</u> - இல்லை.

N PREETHI Digitally signed by N PREETHI Date: 2026.04.27 16:26:10 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வானூர்.